**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆனி மாதம் 12 ம் நாள்
**இ.ம.எண். 205/2023**
**இல்**
**அசல் வழக்கு எண். 76/2023**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, இளையாளூர் கிராமம், பள்ளிவாசல் தெரு, கதவிலக்கம் 4/62 என்ற முகவரியில் வசிக்கும் முகமது அனஸ் மகளும், ஹாஜா மெய்தீன் மனைவியுமான முஸ்லீம், 26 வயதுடைய ஃபைரோஜ் பானு

..மனுதாரர்/வாதி

//எதிர்//

1) மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆயப்பாடி, திருக்களாச்சேரி கிராமம், மாரியம்மன் கோவில தெரு, கதவிலக்கம் 6/99 என்ற முகவரியில் வசிக்கும் சாமிக்கண்ணு குமாரர் இந்து, முருகேசன்.
2) மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, இளையாளூர் கிராமம், பள்ளிவாசல் தெரு, கதவிலக்கம் 4/62 என்ற முகவரியில் வசிக்கும் காதர் குமாரர் முஸ்லீம், 58 வயதுடைய முகமது அனஸ்.

..எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

மனுதாரரால் இம்மனுவானது எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, பிரதிநிதிகளோ மனு சொத்தில் அத்துமீறி தனது அமைதியான வசத்திற்கும், அனுபவத்திற்கும் இடையூறு செய்யவோ, மனு சொத்தில் அத்துமீறி நுழையவோ கூடாது என இவ்வழக்கு முடியும் வரை ஓர் தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அவ்வாறே இம்மனு முடியும்வரை ஓர் எக்ஸ்பார்ட்டி இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு 14.07.2023 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 14.07.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் வழக்கறிஞர் திரு.K.சங்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவாணை**

இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தை சேர்ந்த தரங்கம்பாடி தாலுக்கா, திருக்களாச்சேரி கிராமம், பெரியகூத்தூர் உள் கிராமத்தில் சர்வே எண். 138/36B1–ல் நஞ்சை, விஸ்தீரணம்–0.19.50 ஏர்ஸ்க்கு சமமான 0.48 செண்ட் பூரா.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி